DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 396/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.அனிதா |
| Father's Name (or) Husband Name | : | க/பெ. கனி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1,A2 absent. u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 10.11.2025

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஆர்எஸ் மங்கலம் செட்டியமடையில் வசித்து வருகிறேன். நான் தையல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். 04.03.2020 தேதி மைக்கேல்ராஜ் மற்றும் சந்தோஷ்குமார் எங்க வயலில் வைத்து எனது அப்பா இருதயராஜை தாக்கியது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளித்தபோது மறுநாள் சாயங்காலம் போலிசார் சம்பவயிடமான எங்கள் வயல்காட்டிற்கு வந்து விசாரிக்க வந்தார்கள். வாய்க்காலில் ஓடும் தண்ணீர் மற்றும் சுற்றுப்புறங்களை போட்டோ எடுத்தார்கள். அதன்பிறகு அங்கு வந்து விசாரித்ததற்காக

என்னிடமும் எனது கணவர் கனியிடமும் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் நாங்கள் போட்டுகொடுத்தோம். **பார்வைமகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா,ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னை விசாரிக்கும்போது போலிசார் எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டுகொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இவ் வழக்கின் இருதயராஜ் எனது தந்தைஎன்றால் சரிதான். பார்வைமகசரில் என்னுடன் கையொப்பம் இட்ட மற்றொரு சாட்சியான கனி என்னுடைய கணவர் என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகளுக்கும் எனது தந்தைக்கும் முன்பிரச்சனை காரணமாக பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். போலிசார் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய வந்தபோது நான் தான் அவர்களை சம்பவயிடத்திற்கு அழைத்துசென்றேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் இட்ட பார்வைமகசரில் என்ன எழுதியிருந்தது என்றால் சம்பவம் தொடர்பாக எழுதியிருந்தது அதை நான் படித்து பார்த்தேன்.

2. நானும் எனது கணவரும் விசாரணைக்காக காவல்நிலையம் சென்றோமா என்றால் சென்றோம். காவல்நிலையத்தில் வைத்து போலிசாரிடம் கையொப்பம் போட்டு கொடுத்தேனா என்றால் இல்லை மறுநாள் சம்பவயிடத்திற்கு போலிசார் விசாரணை செய்ய வரும்போதுதான் கையொப்பம் போட்டுகொடுத்தேன். இவ்வழக்கின் புகார்தாரர் எனது தந்தை என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தொடர்பாக நான்தான் காவல் நிலையம்சென்று புகார் கொடுத்தேன் என்றால் இல்லை எனது கணவர்தான் புகார் கொடுத்தார். நான் காவல்நிலையத்தில் வைத்துதான் பார்வைமகசரில் கையெப்பம் இட்டேன் என்றும் வழக்கிற்காக சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் இட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தை குறித்து எனக்கு தெரியும் என போலிசாரிடம் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.